# அபிநயசிகாமணி சி. விஸ்வலிங்கம்

ஆழத்து முத்துக்கள் 81

வாழ்வியல் நெருக்குதல்களுக்கு அஞ்சாமல், எதிர் நின்று போராடி நடாகத்துறைக்குத் தன்னை முற்றுமுழுதாக அர்ப்பணித்துக் கொண்ட திருக்கோணமலையின் முத்ததலைஞர், நாடக விற்பன்னர், அபிநயசிகாமணி அமரர் சின்னத்துரை விஸ்வலிங்கம் அவர்கள்.

திருக்கோணமலையில் 10.08.1928ல் பிறந்த இவருடைய தந்தையார் கைலாயர் சின்னத்துரை தாயார் பார்வதிப்பிள்ளை.

பள்ளிப்பருவத்திலிருந்தே இவருக்கு நாடகம் மீது ஒரு ஆர்வம் ஏற்படத் தொடங்கியது. அரங்கியல் துறை மீதான இந்த ஆர்வம், நாடகத்துறை மீதான நாட்டம் இவருக்குள் அந்த சின்ன வயதிலேயே ஏற்பட ஏதோ ஒரு சக்தியின் ஊடாடல் இருந்திருக்க வேண்டும். இவர் வயதொத்த, இவருடன் பள்ளியில் பயின்ற சகல மாணவர்களுக்கும் இந்த ஆர்வமும் நாட்டமும் உண்டாகவில்லையே.

பிந்திய முப்பதுகளில் திருக்கோணமலையில் நாடகங்களை மேடையேற்றிக் கொண்டிருந்த அண்ணாவியார் தம்பிமுத்துவின் நாடகங்களால் வெகுவாக ஈர்க்கப்பட்ட இந்தச் சிறுவன் அவருடைய நாடகங்களைத் தவறாது பார்த்து நாடக பாத்திரங்களை, அவர்களின் உரையாடல்களை மனதில் ஏற்றி தன்வயது பையன்களுடன் சேர்ந்து நடித்துப் பேசி மகிழ்வதுண்டாம்.

ஒரு தடவை தான் முதல் நாள் பார்த்த பவளக்கொடி நாடகத்தை அண்டை அயல் வீட்டுப் பையன்களுடன் சேர்ந்து நடித்துக் கொண்டிருந்தபோது தந்தையாரிடம் மாட்டிக் கொண்டார்.

தரதரவென்று இழுத்துக் கொண்டு வந்து சிறுவனை நையப்புடைத்த கைலாயர் சின்னத்துரைக்கு ஆத்திரம் அடங்கவில்லை.

'படிடான்னு பள்ளிக்கனுப்பினால் பவளக்கொடி நாடகம் போடுறீகளோ... நாசமாப் போறவனே...' என்று கத்தியபடி ஒரு கயிற்றை எடுத்து பையனின் கைகளைக் கட்டி, கால்களைக் கட்டி வீட்டின் முன் நின்ற பப்பாளி மரத்துடன் கட்டி வைத்துவிட்டார்.

பக்கத்துப் பக்கத்து வீட்டுக்காரர்கள் ஓடிவந்து தடுத்துப் பார்த்தார்கள். உறவினர்கள் அழுது ஆர்ப்பாட்டம் பண்ணினார்கள். ஒன்றுக்கும் மசியாத தந்தை 'அப்படியே கிடந்து சாகட்டும்... இப்பவே கூத்தாடிப்பயலாகி நம்ப குடும்ப மானத்தைப் பறக்க விடப்பார்க்கின்றான்' என்று கத்தினார்.


சிறிது நேரத்தில் சிறுவனின் தலை தொங்கி விட்டது. மயக்கமாகிவிட்டான் பையன்.

ஊரவரும் உறவினர்களும் 'அவன் கெடக்குறான் பாவிப்பய இப்படியா ஒரு சிறுவனை அடிப்பான்' என்றவாறு கட்டுக்களை அவிழ்த்து சிறுவனுக்குத் தண்ணீர் தெளித்து படுக்க வைத்து மயக்கம் தெளிந்து எழுந்ததும் நிறைய புத்திமதிகள் கூறினார்கள். முக்கிய தொனியாக இருந்தது 'நாடகம் எல்லாம் வேண்டாம்பா நல்லா படி' என்பதே.

இவ்வளவும் நடந்த பிறகும் அடுத்தவாரமே மீண்டும் பையன்களைச் சேர்த்துக் கொண்டு நாடகம் போடத் தொடங்கிவிட்ட மகனைக் கண்ணுற்ற தந்தை 'எப்படியோ தொலையட்டும்' என்று விட்டுவிட்டார்.

நாடக ஆசையால் படிப்பு அறைகுறையில் நின்றுவிட்டது. ஒரு தையற்கடையில் வேலை பழகப் போட்டு விட்டார்கள். நிறைய ஓய்விருந்ததால் ஏராளமான புத்தகங்கள் வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டுள்ளார். ஆனாலும் நாடகம் பற்றிய நினைவுகள் நீறு பூத்த நெருப்பைப் போல் உள்ளே கனன்று கொண்டே இருந்தது.

திருக்கோணமலை அண்ணா மன்ற அமைப்பாளர் இராய்ப்பு மாஸ்டர் ஒரு நாடகம் போடப் போவதாக அறிந்து தனக்கும் ஒரு



வேஷம் கேட்டுப் போய் நின்றார். சரிவரவில்லை. நாடகம் போடும் எத்தனையோ பேரிடம் ஒரு பாத்திரம் தருமாறு கேட்டு நின்றும் ஒன்றும் ஆகவில்லை. மிகவும் சோர்ந்து போயிருந்தார்.

அந்தச் சோர்வைப் போக்குவதுபோல் வந்து சேர்ந்தார் இவருடைய நண்பர் ஒருவர். சின்ன வயதிலிருந்தே இவருடன் நட்புக் கொண்டிருந்த அவருக்கு இவருடைய நாடகத்தாகம் புரிந்திருந்தது.

நண்பர் அவரிடம் கேட்ட முதல் கேள்வி 'விசுவா நீ ஏன் ஒரு நாடகம் எழுதக்கூடாது என்பதாகும்.

நண்பரின் இந்தக் கேள்வியும், நண்பர் இவர் மேல் வைத்திருந்த நம்பிக்கையும் இருபது வயது இளைஞனான விசுவலிங்கத்தை உற்சாகப்படுத்தியது. ஒரு நாடகம் எழுதத் தொடங்கினார். எழுதத் தொடங்கிய பிறகே அதன் சிக்கல்கள் தெரியத் தொடங்கின. ஏறத்தாழ ஒரு வருடம் முடிகின்றபோது நாடகப் பிரதி தயாராகிவிட்டது. நாடகப் பிரதி தயாராகிவிட்டால் போதுமா. அரங்கேற்ற வேண்டுமே. மேடை ஏற்றுவதற்கான ஆனுபவப் பாடங்களைப் படிக்கவும், நண்பர்கள் உதவியுடன் பணம் சேர்த்துக்கொள்ளவும் மேலும் ஒரு வருடம் பிடித்தது.

நண்பரின் உற்சாகமூட்டலுடன் தனது இருபதாவது வயதில் நாடகம் எழுதத் தொடங்கிய விசுவலிங்கம் அவர்கள் 1950ல் தனது இருபத்திரண்டாவது வயதில் 'கொள்ளைக்காரன்' என்ற தனது முதல் நாடகத்தை திருக்கோணமலையில் மேடையேற்றினார். கதை வசனம், நெறியாள்கை கதாநாயகன் வேஷம் ஆகிய மூன்றையும் அவரே ஏற்றிருந்தார். இது அவருடைய கன்னி முயற்சி என்றாலும் நிறையவே படிப்பினைகளையும், அனுபவங்களையும் பாராட்டுதல்களையும் இவருக்குப் பெற்றுக் கொடுக்கத் தவறவில்லை.

50களுக்குப் பின்னரான திருக்கோணமலையின் நாடக வரலாற்றில் பெருமைக்குரிய பங்களிப்பாளரான திரு. விசுவலிங்கம் அவர்கள், நாடக மலர்கள், நாடக விழா மலர்கள், நாடக மன்ற வெளியீடுகள் போன்றவற்றில் தனது அரங்கியல் அனுபவங்கள் பற்றி நிறையவே சிறுசிறு கட்டுரைகள் எழுதியுள்ளார்.

தன்னுடைய முதல் நாடகம் பற்றி எழுதும் போது 'அச்சம், அனுபவமின்மை, ஆதரவு தர ஆட்களில்லாத சூழல், தேவையான பணமில்லாமை போன்றவற்றால் மிகவும் பாதிக்கப்பட்டிருந்தேன்... பாராட்டு கிடைத்தது பணம் கிடைக்கவில்லை...' என்றெழுதுகின்றார்.

இரண்டாவது நாடகம் அறுபதுகளில் மேடை ஏறியது. முதல் நாடகம் 50ல் மேடையேற இரண்டாவது நாடகம் 'சேர நாட்டு இளவரசி' அறுபதில் மேடை காண்கிறது. இந்த இடைப்பட்ட பத்து வருடங்களில் நாடக நூல்கள், அரங்கியல் பற்றிய நெளிவு சுழிவுகள் நுட்பங்கள் என்று நிறைய விஷயங்களைக் கற்கும் வாய்ப்பினை ஏற்படுத்திக் கொண்டுள்ளார்.

நமக்குத் தொழில் கவிதை என்று செயற்பட்ட பாரதி போல் நாடகத்துறைக்காகத் தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டவர் இந்த அபிநயசிகாமணி.

இத்தனை வருட படிப்பு, உழைப்பு ஆகிய அனுபவங்களுடன் மேடையேறப்போகும் தன்னுடைய இரண்டாவது நாடகம் தன்னை அரங்கியலில் நிலைநிறுத்தும் என்ற நம்பிக்கையுடன் இருந்தார் நாடகாசிரியர் விசுவலிங்கம் அவர்கள். ஆனால் நாமொன்று நினைக்க தெய்வம் வேறொன்று நினைக்கும் என்பது போல் 'இனி நாடகமே வேண்டாம் என்று முடிவெடுக்கும் அளவுக்கு அவரை துரத்தி விட்டது அவரது சேர நாட்டு இளவரசி.

இவருடைய நெருங்கிய நண்பரான ஆர்மோனியம் சின்னையாப்பிள்ளை அவர்கள் கலாநிதியும், சமூகச் சேவையாளருமான டொக்டர் ஆ. சின்னத்துரை அவர்களிடம் இவரை அழைத்து சென்று முதல் நாடகத்தை வெற்றிகரமாக மேடையேற்றி இரண்டாவது நாடக அரங்கேற்றத்துக்காகக் காத்து நிற்கின்றார் என்று அறிமுகம் செய்து வைத்தார்.

அந்த வைத்தியக் கலாநிதி அமரர் ஆ.சின்னத்துரை அவர்கள் நாடக மேடையேற்றத்துக்கான உதவிகளை நல்க முன்வந்தார்.

நாடகப் பயிற்சிக்கான நல்ல வசதிகள் இல்லாத சூழ்நிலையிலும் மிகச்சிரமத்துடன் பயிற்சிகளை மேற்கொண்டார். எல்லாம் சுமூகமாக நிறைவேறி வந்தன. மேடை ஏற்ற தினத்தன்று முக்கியமான பாத்திரமேற்று நடிக்கும் நடிகர் மதுபோதையில் வந்திருந்தார். மேடையில் அவர் தோன்றும் காட்சிளில் ஒரே குளறுபடிகள்! உரையாடல்களுக்குப் பதிலாக உளரல்கள் வெளியிடப்பட்டன. இயக்குனருக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. நாடகாசிரியரே இயக்குனர் என்பதால், விசுவலிங்கம் அவர்களுக்கு பெரும் அவமானமாகப் போய்விட்டது.

நாடகம் பார்க்க வந்திருந்த ரசிகர் கூட்டம் கைகொட்டிச் சிரித்தது, கல் வீசிக் களித்தது. மேடையில் திரை இழுத்து முடிவிட்டு அரங்கத்தை விட்டு வெளியேறினால் போதும் என்ற நிலை உருவாகியது. யார் முகத்திலும் விழிக்க முடியவில்லை. இனி நாடகம் போடுவதில்லை என்னும் முடிவுக்கு வந்துவிட்டார் இந்த அபிநயசிகாமணி.

இவருடைய திருமண வயதில் பெண் தேடும் படலம் வந்தபோது 'கூத்தாடிகளுக்குக்கெல்லாம் பெண்ணைக் கொடுக்க முடியாது' என்று ஒதுங்கிக் கொண்டவர்களுக்கு இரண்டாவது நாடகத்தின் வீழ்ச்சியும், அதனால் கிடைத்த அவமானமும் களிப்பைக் கொடுத்தன. அப்பாடா பிழைத்தோம் கடவுள்தான் காப்பாறினார் எங்கள் பெண்ணை என்று சூடம் பற்ற வைத்துக் கொண்டார்கள்.

**- தெளிவத்தை ஜோசப் -**

இவருடைய மனைவி மனோன்மணியின் பெற்றோர் பெண் பார்க்கும் நேரத்தில் ஒரு கண்டிஷனுடன் இவருக்குப் பெண் கொடுக்கச் சம்மதித்தனர். 'இனிநாடகம் அது இது என்று கிளம்பக்கூடாது' என்பதுவே அந்தக் கண்டிஷன்.

கண்டிஷனுக்கு இணங்க மாப்பிள்ளை கொஞ்சம் அவகாசம் கேட்டார். அதற்கான காரணம் திருக்கோணமலை வள்ளுவர் கழக மாணவர்களின் கோரிக்கையாகும்.

1953ல் இராமகிருஷ்ணமிஷன் இந்துக்கல்லூரி மாணவர்கள் தங்கள் வள்ளுவர் கழகம் மூலம் திருக்குறள் மாகாநாடு ஒன்றுக்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர். மூன்று நாள் விழாவாக நடைபெற்ற இந்த மாநாட்டிற்கு தமிழகத்திலிருந்தும் பேச்சாளர்கள் பங்கு கொண்டனர். இந்த வள்ளுவர் விழாவுக்கு ஒரு நாடகம் பழக்கி அரங்கேற்றிக் கொடுக்குமாறு கலைஞர் விசுவலிங்கம் அவர்களை வள்ளுவர் கழக மாணவர்கள் கேட்டிருந்தனர். இவரும் உடன்பட்டிருந்தார். நாடகம் பழக்கிக் கொண்டிருந்த நாட்களில் திருமணம் நிச்சயமாயிற்று. திருமணம் நடந்த மறுநாள் நாடக அரங்கேற்றம் நடக்கும் நாள்.

இவர் விழாவுக்குப் போகாவிட்டால் வள்ளுவர் கழக மாணவர்களும் நாடகம் பழகிய மாணவர்களும் ஸ்தம்பித்துப் போய் விடுவார்கள். மேய்ப்பனில்லாத ஆடுகள் போல் கலங்கிப் போவார்கள் என்பது விசுவலிங்கம் மாஸ்டருக்கு விளங்குகிறது.

ஆனாலும் திருமணம் முடித்த மணமகன் நான்கு நாட்களுக்குப் பிறகே வெளியே போக வேண்டும் என்னும் சம்பிரதாயத்தில் பிடியாக இருந்தனர் பெற்றோரும் பெண் வீட்டாரும். இக்கட்டில் மாட்டிக் கொண்டவர் இவர் மெதுவாகத் தன் பிரச்சினையை மனைவியிடம் கூறினார்.

'தயங்காமல் சென்று வாருங்கள், வென்று வாருங்கள், வீட்டார்களை நான் சமாளித்துக் கொள்கின்றேன் என்று வாழ்த்துக்கூறி அனுப்பி வைத்தார். மனோன்மணி என்னும் அந்த மாதரசி.

'மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம்' என்னும் கூற்றின் நிஜம் நிருபணமாகியதை உணர்ந்து கொண்டார் நாடக மாஸ்டர்.

திருக்குறள் மாநாடு வெற்றிகரமாக நடந்-

தொடர்தல் 117ம் பக்கம்

**உங்களுக்குத் தெரிந்த கலைஞர்கள் பற்றி நீங்களும் எழுத வேண்டுமா?**

கலைஞர்கள் பற்றிய விபரங்கள்,
அவர்களுடைய புகைப்படங்களுடன்
உங்களுடைய பெயர், தொலைபேசி எண், புகைப்படம்
மற்றும் மின்னஞ்சல் முகவரியையும் தாய்வீட்டுக்கு
அனுப்பிவையுங்கள்.

Thaiveedu
Woodside Square, P.O.Box #63581
1571 Sandhurst Cir.
Toronto, ON. M1V 1V0

Fax : 416.849.0594
E-mail : info@thaiveedu.com

# அபிநயசிகாமணி...

116ம் பக்கத் தொடர்ச்சி...

தேறியது. திருவள்ளுவர் கழகத்தினர் நாடகப் பயிற்றுவிப்பாளரை மனமாற வாழ்த்தி நன்றி கூறினர்.

நாடக மாஸ்டர் சி.விசுவலிங்கம் அவர்களை கழகத்தின் ஆஸ்தான அரங்கியல் பயிற்றுவிப்பாளராகக் கொண்டு கழகம், பல சமூக, இதிகாச, புராண நாடகங்களை மேடை ஏற்றியதுடன் பல கலைஞர்களையும் உருவாக்கியிருக்கின்றது.

அத்தனைக்கும் பின்னணியில் இருந்து செயற்பட்டவர் திரு.சி. விஸ்வலிங்கம் அவர்கள். மூன்று நாட்கள் நடந்து முடிந்த வள்ளுவர் விழாவின் பின் இனி ஒன்றுமில்லை ஓய்வுதான் என்று வீட்டில் இருந்தார்.

இனி நாடகம் போடக் கிளம்பக்கூடாது என்று வீட்டுப் பெரியவர்களிடமிருந்து கட்டளை வந்தது. கட்டளை வந்த சில நாட்களிலேயே பாரதி பிறந்த தினம் வந்தது. காந்தி சேவா சங்கத்தின் செயலாளர் தியாகி இராஜகோபாலும் கூடவே வந்தார்.

‘நான் விடுவதாக இருந்தாலும் நாடகத்துறை என்னை விடுவதாக இல்லை’ என்கின்றார் இவர். ‘என்னுடைய நாடகத்துறை ஆவலையும், ஆற்றலையும் புரிந்து கொண்டு ஒரு உற்சாகத்துடன் எனக்குப் பூரண அனுமதியளித்து சுதந்திரமாக இயங்கவிட்ட எனது துணைவியாருக்கு நான் பெரிதும் கடமைப்பட்டவனாவேன்’ என்று எழுதி வைக்கின்றார் இந்த நாடக மேதை.

திருவள்ளுவர் கழகத்தினூடாக ‘மகாகவி பாரதியார், தமிழர் பண்பு, ஏன் பிறந்தோம் போன்ற நாடகங்களை மேடை ஏற்றியவர் கலாவதி நாடகசபாவினரின் ‘சிற்பியின் சிதைந்த உள்ளம்’, மக்கள் நாடக சபாவின் ‘யார்குற்றம்’ கலைவாணி நாடகசபாவின் ‘சமாதி’ ஆகிய நாடகங்களுக்கு பயிற்சியாளராக செயற்பட்டுள்ளார்.

சிற்பியின் சிதைந்த உள்ளம் நாடகத்துக்காக பெண் பாத்திர நடிகைகளுக்கும் முதன் முதலாகப் பயிற்சி அளித்துள்ளார்.

இதே காலகட்டத்தில்தான் சிங்கள நாடக உலகிற்குள்ளும் இவர் காலடி வைக்கின்றார். சிங்கள நண்பர் ஒருவரின் துணையுடன் சிங்கள நாடகப் பயிற்றுவிப்பாளராக பணியாற்றும் வாய்ப்பைப் பெற்று, பெற்ற வாய்ப்பை தகுந்த முறையில் பயன்படுத்தியும் கொண்டுள்ளார்.

அசரணயா, வெறதிமக, மகே நங்கி, துஷ்ட நெந்தம்மா, மகே லேலி, மகே துவ, போன்றவை இவர் பயிற்றுவித்து மேடையேற்றிய சிங்கள நாடகங்களில் சில.

நாடகத்துக்கான பயிற்சியின்போது, அவர்களிடம் உள்ள குருபக்தியும், கீழ்ப்படிதலும், முறையாகவும் குறித்த நேரத்திலும் வந்து ஒத்திகையில் தவறாது பயிற்சி பெறும் ஒத்துழைப்பும் நம்மவர்களிடம் காணக்கிடைக்காதவை என்றும், ஒரு நாளைக்கு இரண்டு மூன்று காட்சி என்றும், ஒரு நாளைக்கு ஒரு காட்சி என்று தொடர்ந்து இரண்டு மூன்று நாட்களுக்கென்றும் சிங்கள நாடகங்களை மேடையேற்றுகின்றார்கள்.

நாம் வீடுவீடாகச் சென்று டிக்கட் விற்கின்றோம். அவர்களோ வரிசையில் வந்து டிக்கெட் வாங்கி நாடகம் பார்க்கின்றார்கள்... தமிழ் நாடகங்களைவிட சிங்கள நாடகங்கள் தீவிர வளர்ச்சிப் பெறுவதற்கு இவைகளும் காரணங்களாகின்றன என்று எழுதியிருக்கின்றார் இவர்.

சிங்கள நாடகங்களை எழுதி, பயிற்றுவித்து இயக்கி, மேடை ஏற்றிய தனது அனுபவங்களைப் பற்றிப் பேசும் போது தனது முதல் சிங்கள நாடக அனுபவம்பற்றி இப்படிக் குறிக்கின்றார்.

‘சிங்கள நாடகம் ஒன்றை இயக்குவதற்கு முதல் சந்தர்ப்பம் கிடைத்தபோது சில சட்ட திட்டங்களுடன் சென்றேன். நாடகத்துரையில் ஈடுபட்டிருந்தவர்கள் மீன்பிடித்து விற்கும் தொழில் செய்பவர்கள். ஓரளவு கட்டுப் பாடற்ற குணம் கொண்டவர்களாகவே இருந்தனர். இருப்பினும் எனது சட்டதிட்டங்களை அவர்கள் மத்தியில் கூறினேன்.

நடிகராகத் தெரிவு செய்யப்பட்டவர் அவருடைய வேடத்தில் பத்து ஒத்திகை நடை பெறும்வரை நிரந்தரமாக்கப்படமாட்டார்.

பெரிய வேடம் எடுத்தவர் சிறிய வேடத்துக்கும் சிறய வேடம் எடுத்தவர் பெரிய வேடத்துக்கும் மாற்றப்படலாம்.

குறிப்பிட்ட காலத்துக்குள் வசனங்களை மனப்பாடம் செய்துகொள்ள வேண்டும்.

ஒத்திகையின்போது மது அருந்தவோ அரசியல் பேசவோ கூடாது.

உங்கள் மாஸ்டரின் முன் புகைத்தலும் கூடாது.

நாடகம் பழக்கும் மாஸ்டரைத் தவிர மற்றவர்கள் நடிப்புச் சொல்லிக் கொடுக்கவோ அடுத்தவரின் நடிப்பை கிண்டல் செய்யவோ கூடாது.

இந்த சட்டத்திட்டங்களை அவர்கள் மத்தியில் வைத்தபோது யாவரும் ஒருமித்த குரலில் ஏற்றுக் கொண்டு புத்த பகவானின் படத்திற்கு முன்னால் சத்தியம் செய்து கொடுத்தனர்.

முதல் நாடகம் மிகச் சிறப்பாக அமைந்து விட்டது. இரண்டாவதாக ஒரு நாடகத்தையும் என்னையே பழக்கும்படி வேண்டினர்... என்று பதிந்து வைத்துள்ளார் அமரர் விசுவலிங்கம் அவர்கள்.

சிங்கள – தமிழ் கலைஞர்களை ஒரே மேடையில், ஒரே நாடகத்தில் நடிக்க வைத்து ஒருமைப்பாட்டுக்கும், இன ஐக்கியத்துக்கும் ஒரு கலைப்பாலமாகத் திகழ்ந்தவர் அபிநயசிகாமணி’ என்று குறிக்கின்றார் அவரின் நெருங்கிய நண்பரும், நாடகக்கலைஞரும், புத்தக வெளியீட்டாளருமான அமரர் சித்தி அமரசிங்கம் அவர்கள்.

‘நூற்றுக்கணக்கான நாடகங்களை எழுதி, இயக்கி மேடை ஏற்றிய ஒரு அற்புதக் கலைஞன் திரு. விஸ்வலிங்கம் அவர்கள். தொண்ணூறுகளில் ஒரு இலக்கியக் கூட்டத்தில் அவரைச் சந்தித்தேன். திருக்கோணமலை இந்த மேதையை ஏன் வெளிக்காட்டவில்லை என்ற கேள்விக்கு என்னால் விடைகாண முடியவில்லை என்றெழுதுகின்றார் மூதறிஞர் அமரர் வ.அ. இராசரத்தினம் அவர்கள்.

நாடக எழுத்தாளாராக, நடிகராக, நெறியாளராக, ஒரு நாற்பதாண்டு காலம் திருக்கோணமலையின் நாடக உலகை ஆக்கிரமித்திருந்த திரு.சி. விசுவலிங்கம் அவர்கள், தனது 65 வது வயதில், 1992 நவம்பர் 11ம் திகதி சுகவீனமுற்று திருக்கோணமலை மருத்துமனையில் அமரர் ஆனார்.

அவருடைய நெருங்கிய நண்பரும் திருக்கோணமலை ஈழத்து இலக்கியச்சோலை என்னும் பதிப்பகத்தின் உரிமையாளருமான கலைஞர் சித்தி அமரசிங்கம் அவர்கள், தனது பத்தாவது வெளியீடாக இவருடைய இரு நாடகங்களை 1999இல் ஒரு நூலாக வெளியிட்டு இந்த நாடகக் கலைஞனைக் கௌரவித்துள்ளமை இந்த இடத்தில் குறிப்பிடக்கூடியதே.

இந்த நூலில் இவருடைய 110 ஆவது நாடகம் என்னும் குறிப்புடன் 1973ல் மேடை ஏறிய ‘எல்லாம் காசுக்காக’ என்ற நாடகமும் 1953 ல் பாரதி விழாவின்போது மேடை ஏற்றப்பட்ட சிவபக்தன் இராவணன்’ என்னும் நாடகமும் தொகுக்கப்பட்டுள்ளன.



theliwathai.joseph@thaiveedu.com